விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி கிழக்கு ஒன்றியம் கோணை ஊராட்சிஅப்பம்பட்டு உள்ளிட்ட பகுதிகளில்விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார். உடன்செஞ்சி கிழக்கு ஒன்றிய செயலாளர், ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், மனிதநேய மக்கள் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் சையத் உஸ்மான், ஒன்றிய நிர்வாகிகள் ஆறுமுகம், வாசு, அய்யாதுரை, அனையேரி ரவி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் வள்ளியூர் மாவட்ட அலுவலகத்தில் கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தலைமையில் நடைபெற்றது.உடன் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஞானதிரவியம்,சித்திக்,பொறுப்பு குழு உறுப்பினர்கள் ஜார்ஜ் கோசல், நம்பி, அல்போன்ஸ்,ஆதிபாண்டி,ஹரி கிருஷ்ணன், அனுராதா, சந்திரகலா, பொதுக்குழு உறுப்பினர்கள் பரமசிவ ஐயப்பன்,கனகராஜ்,சாந்தி சுபாஷ், உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

நெல்லை – குமரி மாவட்டங்களில் அடங்கிய

சட்டமன்றத் தொகுதிகளில் கழக நிர்வாகிகளுடன் கள ஆய்வு!

ஆய்வாளர்கள் சுபா.சந்திரசேகர் – டாக்டர் யாழினி அறிக்கை!

நெல்லை, மே.18- கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற 14/05/2026 தேதிய மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் மற்றும் 16/05/2026 தேதிய கள ஆய்வுக்குழு உறுப்பினர்கள் கூட்டம் ஆகியவற்றில் வகுக்கப்பட்ட வழிகாட்டு தலின்படி, கழக சட்ட திட்ட திருத்தக்குழு இணைச் செயலாளர் திரு. சுபா. சந்திரசேகர் மற்றும் கழக மகளிர் அணி இணையதள செயலாளர் டாக்டர். யாழினி ஆகியோர் ஆய்வுப்பணி மேற்கொள்ள உள்ள திருநெல்வேலி (மத்திய), திருநெல்வேலி (மேற்கு), திருநெல்வேலி (கிழக்கு), கன்னியாகுமரி (மேற்கு), மற்றும் கன்னியாகுமரி (கிழக்கு) ஆகிய மாவட்டங்களின் மாவட்ட செயலாளர்கள் மற்றும் பொறுப்பாளர்களுடன் ஆலோசனை செய்து எடுக்கப்பட்ட முடிவுகளையொட்டி கீழ்க்கண்ட அட்டவணைகளின்படி ஆய்வுப்பணிகள் நடைபெற உள்ளன.

நெல்லை மாவட்டங்களின் கள ஆய்வு நிகழ்ச்சி நிரல் விபரம்:

1. 19/05/2026 செவ்வாய்க்கிழமை பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி
2. 20/05/2026 புதன்கிழமை நெல்லை சட்டமன்றத் தொகுதி
3. 21/05/2026 வியாழன் அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதி
4. 22/05/2026 வெள்ளி ஆலங்குளம் சட்டமன்றத் தொகுதி
5. 23/05/2026 சனிக்கிழமை இராதாபுரம் சட்டமன்றத் தொகுதி
6. 26/05/2026 செவ்வாய்க்கிழமை நாங்குநேரி சட்டமன்றத் தொகுதி

குமரி மாவட்டங்களின் கள ஆய்வு நிகழ்ச்சி நிரல் விபரம்:

1. 27/05/2026 புதன்கிழமை பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதி
2. 28/05/2026 வியாழன் விளவங்கோடு சட்டமன்றத் தொகுதி
3. 29/05/2026 வெள்ளி கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதி
4. 30/05/2026 சனிக்கிழமை கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதி
5. 31/05/2026 ஞாயிறு குளச்சல் சட்டமன்றத் தொகுதி
6. 01/06/2026 திங்கள் நாகர்கோயில் சட்டமன்றத் தொகுதி

காலை: 9.30

மாவட்டச் செயலாளர், மாவட்ட நிர்வாகிகள், இந்நாள், முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், 2026 சட்டமன்ற தேர்தல் வேட்பாளர்கள், தலைமைக்கழக பார்வையாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர மற்றும் பேரூர் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைக்கழக, வார்டு கழக செயலாளர்கள் மற்றும் பாகநிலை முகவர்கள் (BLA 2) பங்கேற்றிட வேண்டும்.

குறிப்பு: தற்போது பொறுப்பில் இல்லாத மூத்த கழக முன்னோடிகளையும் கண்டிப்பாக பங்கற்றிடச்செய்திட வேண்டும்.

மாலை: 4.00 மணி

கழக சார்பு அணிகளின் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் நிர்வாகிகள் பங்கேற்றிட வேண்டும்.

கூட்டத்தில் கைபேசிகள் தவிர்க்கப்படும்.

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் தலைமையின் வழிகாட்டு நெறிமுறைகளின் படி நிகழ்ச்சிகளை பொறுத்தமான இடங்களில் ஏற்பாடு செய்திடுவதோடு, சம்பந்தப்பட்ட அனைவரும் கட்டாயம் கலந்து கொள்ள செய்ய வேண்டுமாய் அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கூட்டத்தில் கலந்து கொள்ளும் கழக நிர்வாகிகள் மற்றும் முன்னோடிகள் தங்களது கருத்துகளை வாய்மொழியாக கூறுவதோடு, எழுத்துப் பூர்வமாகவும் அளிக்கலாம்.

இவ்வாறு கழக சட்ட திட்ட திருத்தக்குழு இணைச் செயலாளர் திரு. சுபா. சந்திரசேகர் மற்றும் கழக மகளிர் அணி இணையதள செயலாளர் டாக்டர். யாழினி ஆகியோர் கேட்டுக் கொள்கிறார்கள்.

கழகத் தலைவர் மு. க. ஸ்டாலின் அறிவிப்பு!

நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தல் முடிவுகள் குறித்து கள ஆய்வு!

மூத்த வழக்கறிஞர் ஜெ.ரவீந்திரன் - திருமதி. ஈரோடு ஜெ. வீரமணி பங்கேற்பு!

தேதி	கழக மாவட்டம்	தொகுதி	மாவட்டச் செயலாளர்
19.05.2026	சங்கராபுரம்	கள்ளக்குறிச்சி வடக்கு	தா. உதயசூரியன்
20.05.2026	கள்ளக்குறிச்சி	கள்ளக்குறிச்சி தெற்கு	வசந்தம் க. கார்த்திகேயன்
21.05.2026	ரிஷிவந்தியம்		
22.05.2026	உளுந்தூர் பேட்டை	கள்ளக்குறிச்சி வடக்கு	தா. உதயசூரியன்
23.05.2026	விழுப்புரம்	விழுப்புரம் மத்திய	டாக்டர் இரா. லட்சுமணன்
24.05.2026	வானூர்		
25.05.2026	செஞ்சி	விழுப்புரம் வடக்கு	செஞ்சி கே. எஸ். மஸ்தான்
26.05.2026	மயிலம்		
27.05.2026	திண்டிவனம்		
30.05.2026	விக்கிரவாண்டி	விழுப்புரம் தெற்கு	டாக்டர் பொன். கௌதம சிகாமணி
31.05.2026	திருக்கோயிலூர்		

கடலூர் கிழக்கு மாவட்டம் முழுவதும்

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடுவோம்!

மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

கடலூர், மே.18- கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம், 16-05-2026, அன்று மாலை, காட்டுமன்னார் கோயில், எம்.ஆர்.கே அரங்கத்தில், தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமையில் நடைப்பெற்றது.

கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர்,குறிஞ்சிப்பாடி சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார்.

கழக பொறியாளர் அணித்தலைவர் துரை.கி.சரவணன், தொகுதி பார்வையாளர்கள் விஜயன் ராமகிருஷ்ணன், அ.பாரிபாலன், எம்.கே.சிவா, மாவட்டப்பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன், மாவட்ட கழக துணை செயலாளர்கள் அ.ஞானமுத்து, ஆர்.சக்திவேல், சுதா சம்பத் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் கீழ்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர், முத்த மிழறிஞர் கலைஞர் அவர்களின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, 3-ம் தேதி கடலூர் கிழக்கு மாவட்ட கழகம் சார்பில் மாவட்டம்,மாநகரம்,ஒன்றியம்,நகர, பகுதி, பேரூர்க் கழகம் சார்பில் கழக கொடியேற்றியும், நலத்திட்ட உதவிகள் வழங்கியும்,கல்வி உபகரணங்கள் வழங்கியும், ஏழை எளியோருக்கு உணவு வழங்கியும் சிறப்பாக கொண்டாட வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை எதிர்கட்சி தலைவராக நியமித்த கழக தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து தீர்மானம்.

கடலூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள சட்டமன்ற தொகுதிகளில் கழகம் மற்றும் கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்களுக்கு வாக்களித்த மக்களுக்கும், களப்பணியாற்றிய கழக நிர்வாகிகள்,சார்பு அணி நிர்வாகிகள், கூட்டணி கட்சி தோழர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

கழக தலைவர் தளபதி அவர்கள் தலைமையில் சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெற்ற மாவட்ட கழக செயலாளர் கூட்டத்தில் எடுத்த முடிவின்படி நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தல் முடிவுகள் குறித்து தொகுதிவாரியாக கள ஆய்வு செய்ய குழு அமைக்கப்பட்டுள்ளது. கடலூர் மாவட்டத்திற்கு கள ஆய்வுக் குழுவினர் வருகையின் போது தேவையான ஏற்பாடுகளையும் ஒத்துழைப்பையும் மாவட்ட செயலாளர் அவர்களின் தலைமையில் விவரங்களையும் மாநகர, நகர , ஒன்றிய, பேரூர் செயலாளர்களுடன் தொகுதி பார்வையாளர்களுடன் அளிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது,. என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்நிகழ்வில்; ஒன்றிய கழக செயலாளர்கள்: அ.முத்துசாமி, வி.சிவக்குமார், தங்க. ஆனந்தன்,

த.ஜெயபாண்டியன், கே.ஆர்.ராயர், ஆர்.நாராயணசாமி, கே.ஆர்.கே.கோவிந்தராஜ், எஸ்.செந்தில்குமார், தெ.காசிராஜன், பி.சுப்பிரமணியன், பா.திருமாவளவன், கே.ஆர்.தனஞ்செயன், ஆர்.விஜயசுந்தரம், , ஏ.எஸ். மதியழகன், பி.சுந்தரபாண்டியன்,

ஏ.எம்.மதியழகன், மு.வெற்றிவேல், வி.ஜி.பி.சபா நாயகம், டி.திருமூர்த்தி, வி.பி.பாலு, ஆர்.கலையரசன், எம்.மனோகரன், த.சங்கர், ஆர்.ராஜேந்திரன், கே.நடராஜன், ம.சோழன், வி.கோவிந்தசாமி, கே.மகேஷ்,

கடலூர் மாநகர செயலாளர்: கே.எஸ்.ராஜா,கடலூர் பகுதி செயலாளர்கள்: மு.இளையராஜா,

நகர கழக செயலாளர் த.தமிழ்ச்செல்வன், நகர மன்றத் தலைவர் எஸ்.சிவக்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: வி.ஞானசேகரன், வெ. விக்கரமன், பொதுக்குழு உறுப்பினர்கள்: கே.பி.ஆர்.பாலமுருகன், என்.டி.கணேசன், பா.கோதண்டபாணி, மஞ்சு

மாவட்ட தொகுதி பார்வையாளர்கள் ஆசிரியர் பி.வெங்கடாஜலபதி,ஆசிரியர் சின்னமணி,தருமர்.பழனிசாமி,

பேரூர் செயலாளர்கள்: எஸ்.கணேசமூர்த்தி, கு.வே.ப.ஜெய்சங்கர், க.பழனி, ப.மனோகரன், கே.ஜெயச்சந்திரன், கே.சுரேஷ், தேன்மொழி சங்கர், சார்பு அணி நிர்வாகிகள் தொண்டரணி ஆராமுது, விவசாய அணி பொன்.பன்னீர்செல்வம், தொழுச பழனிவேல்,

மகளிர் அணி த.அமுதராணி,மகளிர் தொண்டரணி ப.மனோரஞ்சிதம், பொறியாளர் அணி அப்பு.சந்திரசேகர், வழக்கறிஞர் அணி பி.அருள்ஜோதி, நெசவாளர் அணி ப.நல்லதம்பி, ஆதிதிஆரவிடர் நலக்குழு ஆர்.பரந்தாமன்,

சிறுபான்மை நலபிரிவு எம்.எஸ்.முகமது யூனஸ், வர்த்தகர் அணி ஆர்.ரெங்கநாதன்,

தகவல் தொழில்நுட்ப அணி ஏ.ஜாபர் அலி, விளையாட்டு மேம்பாட்டு அணி பூ.சதீஷ்குமார், மீனவர் அணி வீ.செல்வபாரதி, அயலக அணி விசுவராஜ், அமைப்பு சாரா ஓட்டுநர் அணி தாணூர் சிவ க்கொழுந்து உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

இர. செங்குட்டுவன்

மே 18 (2021)

இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்ற தொடங்கியவர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கிளைச் செயலாளராகவும், சித்தாமூர் ஒன்றிய பொறுப்பாளராகவும், மாவட்ட கலை,இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

கொளத்தூர் ஊராட்சி மன்றத் தலைவராகவும், சித்தாமூர் ஒன்றியக்குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

இந்தி திணிப்பு எதிர்ப்பு போராட்டம், ஈழத்தமிழர் ஆதரவு போராட்டம் என பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஏ. கோவிந்தசாமி

மே 18 (1969)



மொழிப்போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர். 1952ல் தி.மு.க. ஆதரவோடு போட்டியிட்டு விக்கிரவாண்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினரானார்.

கழகம் நடத்திய மும்முனைப் போராட்டத்தில் முன்னணித் தலைவர்கள் அனைவரும் கைதாகி சிறை சென்றபோது, அண்ணா அவர்களால் கழக பொறுப்பாளராக நியமனம் செய்யப்பட்டவர்.

தி.மு.க. தொழிற்சங்கச் செயலாளராகப் பணியாற்றியவர்.

அண்ணா அவர்களின் நம்பிக்கைக்கு உரியவரானார். தலைவர் கலைஞரின் உற்ற நண்பராக விளங்கியவர்.

1967ல் அண்ணா அமைச்சரவையிலும், அண்ணா மறைவுக்குப் பிறகு தலைவர் கலைஞர் அமைச்சரவையிலும் பணியாற்றியவர்.

"கொள்கை குன்றம் கோவிந்தசாமி" என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.